بسم الله الرحمن الرحيم    نحمده ونصلي على رسوله الكريم    وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 6    இதழ் 7

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

05 ரஜப் 1442 ஹிஜ்ரி கமரி 18 தப்லீக் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 18 பிப்ரவரி 2021


**அல்லாஹ்வின் கட்டளை**

اِنْ تُبْدُوْا خَيْرًا اَوْ تُخْفُوْهُ

اَوْ تَعْفُوْا عَنْ سُوْٓءٍ

فَاِنَّ اللّٰهَ كَانَ عَفُوًّا قَدِيْرًا○

நீங்கள் ஏதேனும் நன்மையை வெளிப்படுத்தினாலோ அல்லது அதை மறைத்து வைத்தாலோ அல்லது (ஒருவருடைய) தீமையை மன்னித்தாலோ நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், பேராற்றல் பெற்றவனும் ஆவான் (என்பதனைத் தெரிந்து கொள்க). (4:150)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## உலகிலிருந்து தீய ஒழுக்கத்தையும், தீய நடத்தையையும் ஒழிக்க விரும்பும் இஸ்லாம் தேவைகளை கருத்தில் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் செய்து கொள்ள அனுமதி நல்கியுள்ளது

## மனித இயல்பு மற்றும் இயற்கை தேட்டங்களின் விவகாரங்களுக்கு இஸ்லாமிய ஷரீஅத் தீர்வு கண்டுள்ளது. மேலும் அது எல்லா அம்சங்களிலும் மனித ஆற்றலை ஒழுங்குபடுத்துகிறது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

பல பெண்களை வைத்துக் கொள்வதற்கு இஸ்லாம் அனுமதி தந்திருப்பதாக பலதார திருமணத்தின் மீது ஆட்சேபனை செய்கின்றனர். ஒன்றிற்கு மேற்பட்ட திருமணங்களை கண்டிப்பாக செய்தே ஆக வேண்டும் என்று திருக்குர்ஆன் கூறுவதை நமக்கு எடுத்துக் காட்டக்கூடிய தைரியமிக்க ஆண் மகன் மைதானத்தில் இருக்கின்றாரா? இதனை நாம் அத்தகைய ஆட்சேபனையாளர்களிடம் கேட்கின்றோம். ஆயினும் பல நேரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் செய்வதற்கு மனிதனுக்கு அவசியம் ஏற்பட்டு விடுகின்றது. இது ஒரு உண்மையான மற்றும் முற்றிலும் இயற்கையான காரியமாகும்.

உதாரணமாக, மனைவி கண் பார்வை இழந்து விட்டாலோ அல்லது ஏதாவது அபாயகரமான நோய்க்கு ஆளாகினாலோ இல்லற வாழ்க்கையை சரிவர நிறைவேற்ற முடியாத சூழல் ஏற்பட்டு விடுகிறது. அதுபோன்ற நிலைகளில் ஓர் ஆண் அனுதாபத்தின் காரணமாக மனைவியை பிரிய விரும்புவதில்லை. அல்லது கருப்பை சம்பந்தப்பட்ட அபாயகரமான நோய்களுக்கு இலக்காகி விடும்போது ஆணின் இயற்கை தேவைகளை அவளால் முழுமை செய்ய முடிவதில்லை. எனவே இதுபோன்ற நிலைகளில் மறுமணத்திற்கு அனுமதி இல்லை என்றால் பின்னர் அதனால் தீய நடத்தையும், தீய ஒழுக்கமும் அதிகரிக்காதா? என்பதை நீங்களே கூறுங்கள்.

மேலும் ஒரு மார்க்கம் அல்லது ஷரீஅத் பலதார திருமணத்தை தடுக்கின்றதென்றால் நிச்சயமாக அது தீய நடத்தையையும், தீய ஒழுக்கத்தையும் ஆதரிக்கின்றது. ஆனால் உலகிலிருந்து தீய ஒழுக்கத்தையும், தீய நடத்தையையும் ஒழிக்க விரும்பும் இஸ்லாம் தேவைகளை கருத்தில் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் செய்து கொள்ள அனுமதி நல்கியுள்ளது.

அதேபோன்று சந்ததி இல்லாததன் விளைவாக வாரிசற்ற மனிதனின் குடும்பங்களில் ஏராளமான சண்டைகளும், சச்சரவுகளும் ஏற்பட்டு விவகாரம் கொலையில் கூட சென்று முடிந்து விடுகின்றது. எனவே பிள்ளைகளைப் பெறுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் செய்வது ஒரு அவசியமான காரியமாகும். இன்னும் கூறப்போனால் அதுபோன்ற நிலைகளில் நல்ல மற்றும் கண்ணியமான மனைவிமார்கள் சுயமே அனுமதி அளித்து விடுகின்றார்கள். எனவே நன்கு சீர்தூக்கிப் பார்த்தால் இந்த விவகாரம் தெள்ளத் தெளிவாகி விடும். இந்த விவகாரத்தில் ஆட்சேபனை செய்வதற்கு கிறித்தவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ஏனெனில் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ள நபி மற்றும் முல்ஹிம்கள் இன்னும் கூறப்போனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மூதாதையர்கள் 200, 300 திருமணங்கள் முடித்துள்ளனர். அவர்கள் தீயவர்களாக இருந்தனர் என்று கூறினால் பின்னர் அவர்களுக்கு இறங்கிய இல்ஹாம் இறைவனுடைய இல்ஹாமாக எங்கனம் இருக்க முடியும்? என்ற கேள்விக்கு பதில் தருவது கடினமாகி விடும்.

அதேபோன்று அடிமை மற்றும் ஜிஹாத் தொடர்பான ஏனைய விவகாரங்களின் மீதான அவர்களின் ஆட்சேபனையும் சரியானதல்ல. ஏனென்றால் தவ்ராத்தில் போர்களைப் பற்றி ஒரு பெரும் தொடராக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இஸ்லாத்தின் போர்கள் தற்காப்பு போர்களாக இருந்தன. அதுவும் பத்து ஆண்டுகளுக்குள் முடிவு பெற்று விட்டன. இந்த விவகாரங்களை அவர்களின் வேதங்களிலிருந்து என்னால் எடுத்துக் காட்ட முடியும் என்பதை நான் பெரும் வாதத்துடன் கூறுகின்றேன்.

அதேபோன்று அனைத்து உண்மைத்துவங்களும் திருக்குர்ஆனில் உள்ளன என்பதை நான் பெரும் வாதத்துடன் கூறுகிறேன். திருக்குர்ஆனில் கூறப்படாத ஓர் உண்மை இருப்பதாக ஒருவர் வாதிட்டால் அவருக்கு நான் அதனை எடுத்துக் காட்ட தயாராக இருக்கின்றேன். மனித இயல்பு மற்றும் இயற்கை தேட்டங்களின் விவகாரங்களுக்கு இஸ்லாமிய ஷரீஅத் தீர்வு கண்டுள்ளது. மேலும் அது எல்லா அம்சங்களிலும் மனித ஆற்றலை ஒழுங்குபடுத்துகிறது.

அதன் மீது எவராலும் ஆட்சேபனை செய்ய முடியாது. ஆயினும் மற்ற மார்க்கங்களின் மீது இஸ்லாம் செய்கின்ற ஆட்சேபனைகளுக்கு அவர்களால் பதிலளிக்க முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 258 – 2018 ஆண்டு காதியான் பதிப்பு)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபாவும், அன்னாரின் மருமகனுமாகிய ஹஸ்ரத் அலி முர்தஸா (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 15 ஜனவரி 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **சுல்ஹ்** மாதம் **15 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு நடைபெற்று வருகிறது. இன்றும் அன்னாரைப் பற்றிய நற்குறிப்பு தொடரும். அன்னாரைப் பற்றி நான் ஒன்று திரட்டியிருந்த கட்டுரை இன்று முழுமை பெற்று விடும். இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் ஒரு முறை ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் தாங்கள் என்மீது அன்பு கொள்கின்றீர்களா? என்று கேள்வி கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஆம் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள் அதனால் ஆச்சரியம் அடைந்து ஓர் உள்ளத்தில் இரண்டு அன்புகள் எவ்வாறு ஒன்றுகூட முடியும்? என்று கேட்டார்கள். மேலும் ஒரே நேரத்தில் தாங்கள் யாரிடம் அன்பு கொள்வீர்கள் என்றும் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ''அல்லாஹ்விடம்'' என்று பதிலளித்தார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 57)

இந்த சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: தங்களுக்கு என்மீது அன்பு உள்ளதா? என்று ஒரு முறை ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கேள்வி கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஆம் என்று பதிலளித்தார்கள். தங்களுக்கு அல்லாஹ்வின் மீதும் நேசம் உள்ளதா? என்று ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் மீண்டும் கேட்டார்கள். ஆம் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். அவ்வாறென்றால் ஒரு வகையில் நீங்கள் ஷிர்க் செய்து விட்டீர்கள் என்று ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்விடம் அவனது அன்பில் வேறொருவரை இணையாக்கிக் கொள்வதற்கு ஷிர்க் என்று கூறப்படும். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், ஹஸனே! நான் ஷிர்க் செய்யவில்லை. நிச்சயமாக நான் உன்மீது அன்பு கொள்கின்றேன். ஆயினும் உன் மீதான அன்பு இறைவன் மீதான அன்புடன் மோதும்போது உடனடியாக நான் அதை கைவிட்டு விடுகின்றேன் என்றும் கூறினார்கள்.

(குருனே ஊலா கி நாமூர் கவாத்தீன் அவ்ர் சஹாபியாத் கே ஈமான் அஃப்ரூஸ்.... அன்வாருல் உலூம் தொகுதி 21 பக்கம் 623)

அடுத்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றி ஓரிடத்தில் ஒரு சம்பவத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு ஏதாவது பெரும் துன்பம் ஏற்படும்போது அன்னார் அல்லாஹ்விடம், كٓهٰيٰعٓصٓ !اِغْفِرْلِيْ !يَا كٓهٰيٰعٓصٓ என்று துஆ செய்வார்கள்.

பொருள்: யா காஃப்! யா ஹா! யா அய்ன்! யா ஸாத்! என்னை மன்னித்தருள்வாயாக. (தஃப்ஸீரே கபீர் தொகுதி 5 பக்கம் 17)

உம்மே ஹானீ அவர்களின் ஓர் அறிவிப்பின் அடிப்படையில் இந்த முகத்தியாத் சொற்களின் பொருள் இவ்வாறாகும்: காஃப் என்பது இறைவனின் போதுமானவன் என்ற பண்பை குறிக்கின்றது. ஹா என்பது இறைவன் நேர்வழி வழங்கக்கூடியவன் என்பதைக் குறிக்கிறது. அய்ன் என்பது இறைவன் எல்லாம் அறிந்தவன் அல்லது இறைவன் மிகவும் ஞானம் படைத்தவனாக இருக்கின்றான் என்பதைக் குறிக்கிறது. மேலும் ஸாத் என்பது இறைவன் உண்மையாளன் என்பதைக் குறிக்கின்றது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 5 பக்கம் 17)

அதாவது அல்லாஹ்வே! நீ போதுமானவனாவாய். நீ நன்கு அறிந்தவனாவாய். நீ உண்மையாளன் ஆவாய். உனது அனைத்து பண்புகளைக் கொண்டும் நான் வேண்டுகின்றேன். நீ என்னை மன்னித்தருள்வாயாக என்று அல்லாஹ்விடம் அன்னார் துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: விரிவுரையாளர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் ஒரு சம்பவத்தையும் கூறுகின்றார்கள்: அன்னார் ஒரு முறை தனது ஒரு வேலைக்காரனை அழைத்தார்கள். ஆனால் அவரிடமிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை. எனவே அன்னார் மீண்டும் மீண்டும் குரல் கொடுத்து அழைத்துக் கொண்டிருந்தார்கள். ஆயினும் அவர் எந்த பதிலும் கொடுக்கவில்லை. சிறிது நேரம் கழிந்த பிறகு அந்த பையன் தானாகவே அன்னாருக்கு முன்னால் வந்தான். அப்போது مَا لَكَ لَمْ تُجِبْنِيْ அன்னார் உனக்கு என்னவாயிற்று? நான் உன்னை எத்தனை முறை அழைத்தேன்? நீ எந்த பதிலும் தரவில்லையே? என்று கேட்டார்கள். அதற்கு அவன் قَالَ لِثِقَتِيْ بِحِلْمِكَ وَاَمْنٍ مِنْ عُقُوْبَتِكَ فَاسْتَحْسَنَ جَوَابَهٗ وَاَعْتَقَهٗ என்று கூறினான்: அசல் விஷயம் என்னவென்றால், எனக்கு தங்களின் மென்மையின் மீது நம்பிக்கை இருந்தது. தங்களின் தண்டனையிலிருந்து நான் என்னை பாதுகாப்பு பெற்றவனாக கருதினேன். எனவே தான் நான் உங்களது அழைப்பிற்கு பதில் கொடுக்கவில்லை என்று கூறினான். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு இந்த சிறுவனனின் பதில் பிடித்தது. எனவே அன்னார் அவனை விடுதலை செய்து விட்டார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 8 பக்கம் 255)

இங்கு ஓர் உலகவாதி இருந்திருந்தால் நீ எனது மென்மையிலிருந்து ஆகுமற்ற பயன் அடைகின்றாயா? என்று கூறி அவனுக்கு தண்டனை வழங்கியிருப்பார். ஆனால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அவனுக்கு பரிசு வழங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் மகன்களாகிய ஹஸ்ரத் ஹஸன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) ஆகியோருக்கு ஒரு நபர் பாடம் நடத்தி வந்தார். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஒரு முறை தமது

பிள்ளைகளை கடந்து சென்றார்கள். அப்போது அந்த ஆசிரியர் தமது பிள்ளைகளுக்கு خَاتِمَ النبيين என்று கற்றுக் கொடுப்பதை செவியுற்றார்கள். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் எனது பிள்ளைகளுக்கு خَاتِمَ النبيين என்று கற்றுக் கொடுக்காதீர்கள். மாறாக, خَاتَمَ النبيين என்று கற்றுக் கொடுங்கள் என்று கூறினார்கள். அதாவது த என்பதற்கு கீழே ஸேருடன் உச்சரிப்பதற்கு பதிலாக த என்ற சொல்லிற்கு மேலே ஸபர் என்ற உச்சரிப்புடன் கற்றுக் கொடுக்கும்படி கூறினார்கள். அதாவது நிச்சயமாக இதற்கு இரண்டு கிராஅத்துகள் உள்ளன. ஆயினும் நான் خَاتَمَ النبيين என்று ஓதுவதையே மிகவும் விரும்புகின்றேன் என்று அன்னார் கூறினார்கள். ஏனென்றால் خَاتَمَ النبيين என்பதன் பொருள் என்னவென்றால் நபிமார்களின் முத்திரை என்பதாகும். خَاتِمَ النبيين என்பதன் பொருள் நபிமார்களை இறுதி செய்பவர் அதாவது இறுதி நபி என்று பொருள்படும். எனது பிள்ளைகளுக்கு த என்ற சொல்லின் மீது ஸபர் வைத்து கற்றுக் கொடுக்குமாறு அன்னார் கூறினார்கள்.

(ஃபரீஸா தப்லீக் அவ்ர் அஹ்மதி கவாதீன், அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 404)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் திருக்குர்ஆனை மனனம் செய்தவராக இருந்தார்கள் என்று அன்னாரைப் பற்றி நிரூபணமாகி உள்ளது. இன்னும் கூறப்போனால் திருக்குர்ஆன் இறங்கியதன் வரிசை கிரமத்தின் அடிப்படையில் திருக்குர்ஆனை எழுதுகின்ற பணியை அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறந்த உடனேயே தொடங்கி விட்டார்கள். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 429)

ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒரு சஹாபி விருந்திற்கு அழைத்தார். சில சஹாபிகளும் அழைக்கப்பட்டிருந்தார்கள். அதில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் அடங்குவார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் வயது ஏனைய சஹாபிகளோடு ஒப்பிடும்போது குறைவாக இருந்தது. அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மற்ற சஹாபிகளிலிருந்து சிறியவராக இருந்தார்கள். எனவே சில சஹாபிகள் அன்னாரிடம் நகைச்சுவையும் செய்து வந்தார்கள். அந்த சஹாபிகள் பேரீத்தம் பழங்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். கொட்டைகளை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு முன்னால் வைத்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இவ்வாறு செய்து வந்தார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இளைஞராக இருந்தார்கள். எனவே உண்பதில் மும்முரமாக இருந்தார்கள். அன்னார் இதனை கவனிக்கவில்லை. தமக்கு முன்னால் கொட்டைகளின் குவியல் கிடப்பதை அன்னார் கண்டபோது சஹாபிகள் அன்னாரிடம் நகைச்சுவையாக அலியே! நீங்களே அனைத்து பேரீத்தம் பழங்களையும் சாப்பிட்டு விட்டீர்களா? இதோ பாருங்கள். அனைத்து கொட்டைகளும் உங்களுக்கு முன்னாலேயே கிடக்கின்றன என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் இயல்பிலும் நகைச்சுவை இருந்தது. அன்னார் எரிச்சல் அடையவில்லை. அன்னார் எரிச்சல் அடைந்திருந்தால் நீங்கள் என்மீது பழி சுமத்துகின்றீர்கள். அல்லது தப்பெண்ணம் கொள்கின்றீர்கள் என்று கூறியிருப்பார்கள். ஆனால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அது நகைச்சுவையாக கூறப்படுகிறது என்பதை புரிந்திருந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் நானும் இதற்கு நகைச்சுவையாக பதிலளிக்க வேண்டும். அதுவே எனக்கு சிறப்பாகும் என்று எண்ணினார்கள். எனவே நீங்கள் அனைத்து கொட்டைகளையும் சாப்பிட்டு விட்டீர்கள். ஆனால் பாருங்கள்! நான் கொட்டைகளை மீதம் வைத்துள்ளேன். நீங்கள் அனைவரும் பேரீத்தம் பழங்களுடன் கொட்டைகளையும் சேர்த்து சாப்பிட்டு விட்டீர்கள். ஆனால் நான் கொட்டைகளை மீதம் வைத்து விட்டேன். என் முன்னால் இருக்கின்ற இந்த கொட்டைகளே அதற்கு ஆதாரமாகும் என்று கூறினார்கள். இவ்வாறு சஹாபிகளிடமே அந்த நகைச்சுவை திரும்பி விட்டது.

(குத்பாத்தே தாஹிர் தொகுதி 33 பக்கம் 259,260)

ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிடுகிறார்கள்: ஹதீஸில் இவ்வாறு வந்துள்ளது. ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தொழுகையில் இமாமிற்கு விடுபட்ட வசனங்களை எடுத்துக் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இது உமது பணியல்ல. தவறுகளின் பக்கம் கவனமூட்டுவதற்கு நான் தனியாக நபர்களை நியமனம் செய்துள்ளேன் என்று கூறினார்கள்.

(குத்பாத்தே முஹ்மூத் தொகுதி 25 பக்கம் 299)

தொழுகையில் திருக்குர்ஆன் ஓதப்பட்டுக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பின்னால் நின்று தொழுது கொண்டிருக்கும்போது வசனங்களை எடுத்துக் கொடுத்திருக்கலாம். அப்போது நான் அதற்காக நபர்களை நியமனம் செய்துள்ளேன். நீங்கள் அந்தப் பணியை செய்ய வேண்டாம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஒரு பெரும் அறிஞராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஏதாவது ஆலோசனை கேட்கும்போது அதற்கு முன்னர் தருமம் செய்து கொள்ளும்படி திருக்குர்ஆனில் கட்டளை உள்ளது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இந்த கட்டளை இறங்குவதற்கு முன்பு வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எந்த ஆலோசனையும் செய்திருக்கவில்லை. ஆயினும் இந்த கட்டளை இறங்கிய உடன் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். கொஞ்சம் தொகையை சதகாவாக (தருமமாக) முன் வைத்து நான் சிறிது ஆலோசனை பெற விரும்புகின்றேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனியாக சென்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பேசினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தாங்கள் தனியாக என்ன ஆலோசனை செய்தீர்கள்? என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் வேறொரு சஹாபி கேட்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் எந்த ஆலோசனையும் பெறப்படவில்லை. ஆனால் திருக்குர்ஆனின் இந்த கட்டளையின் மீது அமல் செய்ய வேண்டும் என்று நான் விரும்பினேன் என்று பதிலளித்தார்கள். (குத்பாத்தே முஹ்மூத் தொகுதி 25 பக்கம் 752)

இதுவே சஹாபிகளின் நடைமுறையாக இருந்தது. மற்றோர் இடத்தில் இவ்வாறும் இந்த சம்பவம் வருகின்றது. ஒரு சஹாபி மக்களின் வீடுகளுக்கு சென்று வந்து கொண்டிருந்தார். உங்களிடம் ஒரு வீட்டார் திரும்பிச் செல்லுங்கள் என்று கூறினால் நீங்கள் திரும்பிச் சென்று விட வேண்டும் என்று திருக்குர்ஆனில் கட்டளை உள்ளது. அந்த சஹாபி கூறுகின்றார்: எனவே நான் பல முறை முயற்சி செய்தேன். இன்னும் கூறப்போனால் சில நாட்கள் சில முறை தினமும் முயற்சி செய்து வந்துள்ளேன். நான் ஒருவருடைய வீட்டிற்கு சென்று அவர் என்னை திரும்பிச் செல்லும்படி கூற வேண்டும். நானும் திருக்குர்ஆனின் கட்டளையை செயல்படுத்தியவாறு மகிழ்ச்சியுடன் திரும்பி வந்து விட வேண்டும் என்று முயற்சி செய்து வந்தேன். ஆனால் எனது இந்த ஆசை ஒருபோதும் நிறைவேறவில்லை. எந்த வீட்டாரும் என்னை திரும்பிச் செல்லும்படி கூறவில்லை என்று அந்த சஹாபி கூறுகின்றார்.

(தஃப்ஸீர் ஜாமிவுல் அஹ்காமுல் குர்ஆன் தொகுதி 15 பக்கம் 199 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்றைய நாட்களில் நாங்கள் பணிகளில் மும்முரமாக

இருக்கின்றோம். தற்போது சந்திக்க இயலாது என்று நாம் ஒருவரிடம் கூறிவிட்டால் அதனை மக்கள் தவறாக கருதுகின்றனர். ஆனால் சஹாபிகளின் இறையச்சத்தை பாருங்கள். அவர்கள் திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளையின்படியும் செயல்பட வேண்டும் என்று முயற்சி செய்து வந்துள்ளார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறை சஹாபிகளிடம் ஒரு விஷயத்திற்காக சந்தா செலுத்தும்படி கூறினார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் வெளியே சென்று புற்களை வெட்டி அதனை விற்று அதில் கிடைத்த தொகையை சந்தாவாக கொடுத்து விட்டார்கள்.

**(குத்பாத்தே முஹ்மூத் தொகுதி 33 பக்கம் 357)**

ஒரு சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஏறக்குறைய தனது தர்ஸ் வகுப்பில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறியிருந்தார்கள்: ஹஸ்ரத் அல்லாமா உபைதுல்லாஹ் சாஹிப் பிஸ்மல் ஷியா பிரிவின் ஒரு பெரும் அறிஞராக இருந்தார்கள். மிகப்பெரிய அறிஞராகவும் சான்றோராகவும் இருந்த அன்னார் அஹ்மதி ஆகிவிட்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் மட்டுமல்ல அதற்குப் பிறகு பிரிவினை வரை, இன்னும் கூறப்போனால் பிரிவினைக்குப் பிறகு இன்றும் கூட அன்னாரின் சில புத்தகங்கள் ஷியாக்களின் மதரஸாக்களில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: ஏனெனில் எனக்கு நினைவு உள்ளது. என்னிடம் ஒரு ஷியா நண்பர் வந்தார். அப்போது நான் வக்ஃபே ஜதீதில் தொண்டாற்றி வந்தேன். என்னிடம் அவர் உரையாடினார். உரையாடிய பிறகு மன திருப்தியை வெளிப்படுத்தினார். அல்லாஹ்வின் அருளால் அஹ்மதி ஆகி விட்டார். நான் உங்களிடம் இதற்கு முன்பு ஒன்றை கூறவில்லை என்று அவர் கூறினார். அவர் அதற்கு முன்பு ஷியா பிரிவின் அறிஞராக இருந்தார். அவரின் பொறுப்பு எனக்கு நினைவில்லை. எனினும் ஷேக்குபூரா மாவட்டத்தின் ஒரு கிராமத்தையோ அல்லது ஃபைஸலாபாத்தின் ஒரு கிராமத்தையோ அவர் சார்ந்தவராக இருந்தார். அவர் இவ்வாறு கூறினார்: நான் ஷியாக்களுக்கு மத்தியில் ஒரு பெரும் அந்தஸ்து பெற்றுள்ளேன். ஆனால் இன்று நான் கூறுகின்றேன். இன்று வரை உபைதுல்லாஹ் பிஸ்மல் சாஹிப் அவர்களின் புத்தகங்கள் எங்களது மதரஸாக்களில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இந்த அளவுக்கு அன்னாரின் ஞானத்தின் திகில் உள்ளது. நம்மிடம் அவர்கள் கூறுவதில்லை.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்: பிஸ்மில் சாஹிபின் புத்தகம் கற்றுக் கொடுக்கப்படுகின்றன என்பதை ஷியாக்கள் கூறுவதில்லை. எனக்கு இந்த ஆலிம் மூலமாக தெரிய வந்துள்ளது. பிஸ்மல் சாஹிப் யாராக இருந்தார்? பின்னர் பிஸ்மல் சாஹிபுடன் என்ன நடந்தது? என்று அங்கு கற்பிக்கும்போது கூறுவது கிடையாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஒப்புக் கொண்டவுடன் அன்னார் தனது அனைத்து கண்ணியத்தையும் முதுகுக்குப் பின்னால் தூக்கி வீசி விட்டார்கள். இது அன்னாரின் புத்தகத்தில் உள்ள ஆதாரமாகும். ஒரு சாதாரண நபரின் சான்றல்ல. அதாவது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் உபைதுல்லாஹ் பிஸ்மல் சாஹிப் அவர்களின் புத்தகத்திலிருந்து ஆதாரத்தை எடுத்து வைக்கின்றார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த அனைத்து முன்னுரைக்குப் பிறகு அந்த புத்தகத்திலுள்ள விஷயத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மிகப்பெரும் வீரர் யார்? என்று மக்களிடம் கேட்டார்கள். தாங்களே மிகப்பெரிய வீரர் ஆவீர்கள் என்று மக்கள் பதிலளித்தனர். நான் எப்போதும் எனக்கு சமமானவருடன் தான் சண்டையிடுகின்றேன். அவ்வாறிருக்க நான் எப்படி பெரும் வீரராக இருக்க முடியும்? என்று கூறினார்கள். எனவே மிகப்பெரிய வீரர் யார்? என்று எனக்கு கூறுங்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மீண்டும் கூறினார்கள். எங்களுக்குத் தெரியவில்லை. தாங்களே கூறுங்கள் என்று மக்கள் கூறினர். அதற்கு மிகப்பெரும் வீரர் மற்றும் தைரியசாலி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆவார்கள் என்று கூறினார்கள். கேளுங்கள். பதர் போரில் நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக கூடாரம் ஒன்றை தயார் செய்திருந்தோம். இந்த கூடாரத்திற்கு வெளியே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் யார் இருப்பார் என்று எங்களுக்குள் ஆலோசனை செய்தோம். ஏதாவதொரு இணை வைப்பவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விடக்கூடாதே என்று பேசிக் கொண்டிருந்தோம்.

இறைவன் மீது ஆணையாக! எங்களில் எவரும் முன் செல்லவில்லை. அதற்குள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கைகளில் கூர்மையான வாள்களை ஏந்திக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் நின்று விட்டார்கள். அதன் பிறகு எந்தவொரு இணை வைப்பவருக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் வருவதற்கு தைரியம் பிறக்கவில்லை. ஒருவர் முயற்சித்தார் என்றாலும் கூட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உடனே அவர் மீது தாக்குதல் தொடுத்து விடுவார்கள். எனவே அன்னார்தான் அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்தான் எல்லாரையும் விட பெரும் வீரராக இருந்தார்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இணை வைப்பவர்கள் ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சுற்றி சூழ்ந்திருந்தார்கள். அன்னாரை இழுத்துக் கொண்டிருந்தார்கள். இறைவன் ஏகன் ஆவான் என்று கூறிய நபர் நீர் தானே? என்று கேட்டுக் கொண்டிருந்தனர். இறைவன் மீது ஆணையாக! இணை வைப்பவர்களை எதிர்கொள்வதற்கு எவருக்கும் தைரியம் வரவில்லை. ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் முன்னால் சென்றார்கள். இணை வைப்பவர்களை அடித்து உதைத்து அங்கிருந்து அகற்றி விட்டார்கள். எனது இறைவன் அல்லாஹ் மட்டுமே என்று கூறுகின்ற நபருக்கு நீங்கள் துன்பம் கொடுக்கின்றீர்களா? உங்கள் மீது பரிதாபம் என்று அன்னார் கூறிக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு கூறியவாறு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தனது போர்வையை எடுத்து முகத்தின் மீது வைத்துக் கொண்டு எந்த அளவுக்கு அழுதார்கள் என்றால் அன்னாரின் தாடி கண்ணீரால் நனைந்து விட்டது. அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி வழங்குவானாக என்று அன்னார் கூறினார்கள்.

மக்களே! ஃபிர்அவ்ன் சமுதாயத்தின் நம்பிக்கையாளர்கள் நல்லவர்களா? அல்லது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நல்லவர்களா? என்று கேட்டார்கள். ஃபிர்அவ்ன் சமுதாயத்தின் நம்பிக்கை கொண்ட மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் போன்று தனது தூதருக்காக இந்த அளவிற்கு உயிரை அர்ப்பணித்திருக்கவில்லை என்று கூறினார்கள். மக்கள் இதைக்கேட்டு விட்டு அமைதியாக இருந்தார்கள். மக்களே! நீங்கள் ஏன் எனக்கு பதிலளிப்பதில்லை என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கேட்டார்கள். இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஒரு நொடிப்பொழுது ஃபிர்அவ்ன் சமுதாயத்தின் நம்பிக்கையாளர்களின் ஆயிரம் காலத்தை விட சிறந்ததாகும். ஏனென்றால் ஃபிர்அவ்ன் சமுதாயத்தின் நம்பிக்கையாளர்கள் தனது ஈமானை மறைத்து வைத்துக் கொண்டு சுற்றித் திரிந்தனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெளிப்படையாக தனது ஈமானை அறிவிப்பு செய்திருந்தார்கள்.

(தர்ஸுல் குர்ஆன் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) – 16 பிப்ரவரி 1994)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகள் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு அறிவுரை செய்தவாறு கூறினார்கள்: அலியே! உமது தப்லீக் மூலமாக ஒருவர் ஈமான் கொண்டாலும் கூட அது இரண்டு மலைகளுக்கு மத்தியில் உமது ஆடுகள் சென்று கொண்டிருப்பதை கண்டு நீர் மகிழ்ச்சியடைவதை விட உமக்கு அது சிறந்ததாகும்.

(ஹமாரா ஸிம்மா தமாம் துன்யா கோ ஃபதஹ் கர்னே கா காம் யே, அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 464)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை நான் கேட்டேன் என்று உம்முல் மூமினீன் ஹஸ்ரத் உம்மே ஸல்மா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எவர் அலி அவர்களை நேசித்தாரோ அவர் என்னை நேசித்தார். எவர் என்னை நேசித்தாரோ அவர் அல்லாஹ்வை நேசித்தார். எவர் அலி மீது பகைமை கொண்டாரோ அவர் என்னுடன் பகைமை கொண்டார். எவர் என்னுடன் பகைமை கொண்டாரோ அவர் அல்லாஹ்வுடன் பகைமை கொண்டவர் ஆவார்.

(மஜ்மவுஸ் ஷவாஹித் தொகுதி 9 பக்கம் 126 ஹதீஸ் எண் 14757 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: தானியங்களை விளைவித்த மற்றும் ரூஹை படைத்த இறைவன் மீது ஆணையாக! நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு இவ்வாறு உறுதிமொழி கொடுத்துள்ளார்கள். அதாவது நம்பிக்கையாளர் மட்டுமே என் மீது அன்பு கொள்வார். நயவஞ்சகர் மட்டுமே என்னுடன் பகைமை பாராட்டுவார்.

(ஸஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஈமான் ஹதீஸ் எண் 240)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை அழைத்தார்கள். மேலும் உமது உதாரணம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் உதாரணமாகும். யூதர்கள் அன்னார் மீது எந்த அளவிற்கு பகைமை கொண்டார்கள் என்றால் அன்னாரின் தாயார் மீது இட்டுக் கட்டினார்கள். கிறிஸ்துவ மக்கள் அன்னாரின் நேசத்தில் அதாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீதான அன்பில் எந்த அளவிற்கு முன்னேறி விட்டார்கள் என்றால் அன்னாருக்கு பொருத்தமற்ற அந்தஸ்தை அன்னாருக்கு வழங்கி விட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: எச்சரிக்கை! என் தொடர்பாக இரு வகையான நபர்கள் அழிவிற்கு ஆளாவார்கள். ஒருவர், எனது அன்பில் வரம்புமீறி எனக்கு பொருத்தமற்ற அந்தஸ்தை வழங்குவபர் ஆவார். மற்றொருவர் என் மீது பகைமை பாராட்டுபவர் ஆவார். மேலும் என் மீதான பகைமையில் என்மீது இட்டுக்கட்டுபவர் ஆவார்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 439 ஹதீஸ் எண் 1377 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் எதிரிகளுடன் போர் புரியாமல் வெற்றி கொள்ளப்பட்ட செல்வங்களை பங்கிடுவதில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நடைமுறைகளையே பின்பற்றி வந்தார்கள். அன்னாரிடம் எப்போது செல்வம் வந்தாலும் அதனை முழுவதுமாக பங்கிட்டு கொடுத்து விடுவார்கள். அதிலிருந்து எதையும் மீதம் வைக்க மாட்டார்கள். மேலும் உலகமே! என்னைத்தவிர வேறு ஒருவரிடம் செல். வேறு எவரையாவது ஏமாற்றுவாயாக என்று அன்னார் கூறி வந்தார்கள். போரில் கிடைத்த செல்வங்களை தானும் எடுக்க மாட்டார்கள். மேலும் எந்தவொரு நெருங்கிய நண்பருக்கோ அல்லது அன்பருக்கோ அதிலிருந்து எதையும் கொடுக்க மாட்டார்கள். மேலும் அன்னார் கவர்னர் பொறுப்பையும் மற்றும் வேறு பொறுப்புகளையும் நேர்மையான மற்றும் நம்பிக்கையான நபர்களிடம் மட்டுமே ஒப்படைத்து வந்தார்கள். அவர்களில் ஒருவரின் நம்பிக்கை துரோகம் பற்றிய செய்தி கிடைத்தால் அவருக்கு இந்த வசனங்களை எழுதி அனுப்புவார்கள்.

قَدْ جَآءَتْكُمْ مَّوْعِظَةٌ مِّنْ رَّبِّكُمْ (10:58)

اَوْفُوا الْمِكْيَالَ وَالْمِيْزَانَ بِالْقِسْطِ وَلَا تَبْخَسُوا النَّاسَ اَشْيَآءَهُمْ وَلَا تَعْثَوْا فِي الْاَرْضِ مُفْسِدِيْنَ. بَقِيَّتُ اللّٰهِ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ وَمَآ اَنَا عَلَيْكُمْ بِحَفِيْظٍ (11:86,87)

அதன் பொருள்: நீதியுடன் அளந்து கொடுப்பீராக. முழுமையாக கொடுப்பீராக. மக்களுக்குரிய பொருட்களை கொடுப்பதில் குறைவு செய்யாதீர். மேலும் பூமியில் குழப்பவாதிகளாக இருந்து அமைதியற்ற நிலையை பரப்பாதீர்கள். நீங்கள் உண்மையான நம்பிக்கையாளர்கள் என்றால் அல்லாஹ்வின் புறமிருந்து வியாபாரத்தில் உமக்கு எஞ்சியதே உமக்கு சிறந்ததாகும்.

நான் உங்கள் மீது கண்காணிப்பவன் அல்ல. மேலும் எனது இந்த கடிதம் கிடைத்த உடன் நான் உமக்கு பகரமாக வேறொருவரை அனுப்பி அவர் அந்த செல்வங்களை உம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளும் வரை நீர் உம்மிடமுள்ள எனது செல்வங்களை பாதுகாத்து வைப்பீராக என்று கடிதம் எழுதுவார்கள். பின்னர் அன்னார் தனது பார்வைகளை விண்ணை நோக்கி உயர்த்தி இவ்வாறு கூறுவார்கள்: அல்லாஹ்வே! நிச்சயமாக நீ நன்கு அறிவாய். நான் அவர்களை உனது படைப்பினங்கள் மீது அநீதி இழைக்கவும், உனது உரிமைகளை விட்டு விடுவதற்கும் நான் கட்டளை வழங்கவில்லை.

அப்ஜர் பின் ஜுர்மூஸ் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அன்னார் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் அவர்களை கண்டேன். அன்னார் கூஃபாவிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அன்னாரின் மீது இரண்டு கித்ரி போர்வை இருந்தது. கித்ர் என்பது பஹ்ரைன் நாட்டின் ஓர் ஊரின் பெயராகும். அங்கு சிவப்பு நிற தடித்த போர்வைகள் தயாரிக்கப்பட்டு வந்தன. அதிலிருந்து ஒன்றை அன்னார் தனது கீழாடையாக அணிந்திருந்தார்கள். மற்றொன்றை மேலே போர்த்தி இருந்தார்கள். அன்னாரின் கீழாடை கால் கரன்டை வரை இருந்தது. அன்னார் ஒரு சாட்டையை எடுத்துக் கொண்டு கடை வீதிகளில் சென்று கொண்டிருந்தார்கள். மேலும் இறையச்சத்தை மேற்கொள்வதற்கும், உண்மையை பேசுவதற்கும், அழகிய முறையில் வியாபாரம் செய்வதற்கும், அளந்து கொடுப்பதில் முழுமையாக செயல்படுவதற்கும் மக்களுக்கு அன்னார் அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

முஜம்மிஃதய்மியில் ஓர் அறிவிப்பு உள்ளது. ஒரு முறை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பைத்துல் மால் வசமிருந்த அனைத்து செல்வங்களையும் முஸ்லிம்களுக்கு பங்கிட்டு கொடுத்து விட்டார்கள். பின்னர் அன்னாருடைய கட்டளையின் அடிப்படையில் வெள்ளையடிக்கப்பட்டது. பின்னர் கியாமத் நாளன்று அது அன்னாருக்கு சாட்சி சொல்லும் என்ற நம்பிக்கையில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தொழுதார்கள்.

(அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்தில் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 1111 முதல் 1113 வரை – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1892 ஆம் ஆண்டு டிசம்பர் 7 ஆம் தேதி தனது ஒரு கனவில் இவ்வாறு

கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் உருவமாக மாறிவிட்டதை கனவில் கண்டேன். கனவின் அற்புதங்களில் ஒன்று என்னவென்றால், சில முறை ஒருவர் தன்னை வேறொருவராக கருதிக் கொள்கின்றார். எனவே நான் அலி முர்தஸா ஆவேன் என்று தற்போது நான் கருதுகின்றேன். அதாவது ஹவாரிஜ் கூட்டத்தினர் எனக்கு எதிராக மேலும் எனது கிலாஃபத்திற்கு எதிராக செயல்படுகின்றனர். அதாவது அந்த கூட்டத்தினர் எனது கிலாஃபத்தின் விவகாரங்களை தடுக்க நினைக்கின்றனர். மேலும் அதில் குழப்பம் செய்கின்றனர். அப்போது நான் எனக்கு அருகில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருப்பதை கண்டேன். அன்னார் பரிவுடனும், அன்புடனும் என்னிடம் يَا عَلِيُّ! دَعْهُمْ وَأَنْصَارَهُمْ وَزِرَاعَتَهُمْ என்று கூறினார்கள்:

அதாவது அலியே! அவர்களிடமிருந்தும், அவர்களின் உதவியாளர்களிடமிருந்தும் அவர்களின் நிலத்திலிருந்தும் நீர் முகம் திருப்பிக் கொள்வீராக. மேலும் அவர்களை விட்டு விடுவீராக. அந்த குழப்பத்தின் நேரத்தில் பொறுமை செய்யுமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் கூறியதாக நான் கண்டேன். மேலும் அவர்களிடமிருந்து விலகி நிற்குமாறு வலியுறுத்துவதாகவும் நான் கண்டேன். மேலும் நீர் உண்மையில் இருக்கின்றீர். ஆயினும் அவர்களிடம் பேசுவதை தவிர்த்துக் கொள்ளுவது சிறந்ததாகும் என்று அன்னார் என்னிடம் கூறுகின்றார்கள்.

(பரகாத்தே கிலாஃபத், அன்வாருல் உலூம் தொகுதி 2 பக்கம் 176)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹவாரிஜ் படையின் அனைத்து பொருட்களையும் கைப்பற்றினார்கள். ஆயுதங்களையும், போர் சவாரிகளையும் அன்னார் மக்களுக்கு பங்கிட்டு கொடுத்து விட்டார்கள். ஆனால் இதர பொருட்களையும், அடிமைகளையும், அடிமைப் பெண்களையும் கூஃபாவிற்கு கொண்டு வந்த பிறகு அவர்களின் உரிமையாளர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

(மஸ்அலா வஹீ வ நுபுவ்வத் கே முதஅல்லிக் இஸ்லாமி நஸரிய்யா, அன்வாருல் உலூம் தொகுதி 23 பக்கம் 363)

மற்றோர் ஆதாரத்தின் அடிப்படையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தை ஒப்பிடும்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலிருந்து தொலைவில் இருந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் நிலையும் இதுவே ஆகும். நிச்சயமாக அவர்களின் அந்தஸ்து தம்மை விட முந்தைய கலீஃபாவை விட குறைவாகும். ஆனால் அவர்களின் காலத்தில் ஏற்பட்ட சம்பவங்கள் அன்னாரின் அந்தஸ்தின் மீது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலிருந்து தொலைவில் சென்று விட்ட தாக்கம் மட்டுமே இருந்தது. ஏனென்றால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் இருந்த மக்கள் பெரும்பாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமையிலிருந்து பயன் பெற்ற மக்களாக இருந்தார்கள். ஆனால் பிற்காலத்தில் ஏனைய மக்கள் அதிகமாக வந்திருந்தனர். எனவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் ஒருவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் தங்களில் காலத்தில் ஏற்படும் குழப்பங்களைப் போன்று குழப்பங்கள் ஏற்பட்டதில்லை என்று ஒருவர் கேட்டார்.

அதற்கு அன்னார் கூறினார்கள்: விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் தலைமையின் கீழ் என்னைப் போன்ற மக்கள் இருந்தனர். மேலும் எனக்கு கீழ் உம்மைப் போன்ற மக்கள் இருக்கின்றனர்.

(ஜமாஅத் அஹ்மதிய்யா அவ்ர் ஹமாரி ஸிம்மதாரியா, அன்வாருல் உலூம் தொகுதி 5 பக்கம் 95)

பின்னர் மற்றோர் இடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மற்றும் முஆவியாவிற்கு இடையில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் ஒருவர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்களிடம் வருகை தந்து இவ்வாறு கேட்டார்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் காலத்தில் நடைபெறும் போர்களில் தாங்கள் ஏன் பங்கு பெறுவதில்லை? وَقَاتِلُوهُمْ حَتَّىٰ لَا تَكُونَ فِتْنَةٌ என்று திருக்குர்ஆனில் தெளிவான கட்டளை உள்ளபோதிலும் நீங்கள் ஏன் பங்கு பெறுவதில்லலை? என்று கேட்டார். அதற்கு அன்னார் இவ்வாறு பதிலளித்தார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் கட்டளைகளை முழுமை செய்து விட்டோம். அப்போது முஸ்லிம்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. மனிதன் அவனது மார்க்கத்தின் காரணமாக சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வந்தார். அதாவது ஒன்று கொலை செய்யப்பட்டு வந்தார். அல்லது தண்டனை வழங்கப்பட்டு வந்தது. எந்த அளவுக்கென்றால் இஸ்லாம் பரவி விட்டது. அதன் பிறகு சோதனைக்கு உள்ளாக்கப்படவில்லை.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 427,428)

அதாவது போர் செய்யப்பட்டது என்றால் மார்க்கத்தை மாற்றுவதற்காக போர் செய்யப்பட்டது. எவர்கள் மார்க்கத்தை மாற்ற முயற்சி செய்தார்களோ அவர்களுக்கு எதிராகவும் போர் செய்யப்பட்டது. ஆனால் தற்போது மார்க்கம் நிலைபெற்று விட்டது. கொள்கையில் எந்த முரண்பாடும் இல்லை. சில மேலோட்டமான வேறுபாடுகள் உள்ளன. எனவேதான் நான் போரில் பங்கு பெறவில்லை என்று அன்னார் கூறினார்கள். எவ்வாறிருப்பினும் இது அன்னாரின் ஒரு கருத்தாக இருக்கின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ரோமானிய பேரரசர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் முஆவியா அவர்களுக்கிடையே நடைபெற்று வந்த சண்டையை அறிந்து இஸ்லாமிய பேரரசின் மீது தாக்குதல் நடத்த எண்ணினான். அப்போது ஹஸ்ரத் முஆவியா அவர்கள் இவ்வாறு அவருக்கு கடிதம் எழுதினார்கள். எச்சரிக்கையாக இருங்கள். எங்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளை வைத்து நீங்கள் ஏமாற்றத்திற்கு ஆளாகி விடாதீர்கள். நீங்கள் தாக்குதல் தொடுத்தால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் சார்பாக போருக்கு புறப்படும் முதல் தளபதியாக நானாகவே இருப்பேன் என்று கூறினார்கள். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 430)

இதனை விளக்கமாக இவ்வாறு அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு காலம் இருந்தது. அப்போது ரோமானிய பேரரசன் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளை கண்டான். எனவே முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்க படை ஒன்றை அனுப்பினான். இன்றைய காலத்தில் அமெரிக்காவிற்கு இருக்கும் வலிமையைப் போன்று அக்காலத்தில் ரோமானிய பேரரசுக்கு வலிமை இருந்தது. இந்தப் படையை அனுப்புகின்ற எண்ணத்தை ஒரு பாதிரியார் அறிந்து கொண்டார். மேலும் மிகவும் புத்திசாலித்தனமாக அரசரிடம் கூறினார்: நீங்கள் எனது கூற்றை கேளுங்கள். படையை அனுப்புவதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். இந்த மக்கள் தங்களுக்குள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். ஆனால் உங்களுக்கு எதிராக அவர்கள் ஒன்றுகூடி விடுவார்கள். மேலும் தங்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளை மறந்து விடுவார்கள். மேலும் அவர் ஓர் உதாரணத்தையும் கூறினார். அவர் அந்த உதாரணத்தை எந்த எண்ணத்தில் கூறினார் என்பது தெரியாது. நல்ல எண்ணத்தில் கூறினாரா? அல்லது ஏளனம் செய்வதற்காக கூறினாரா? என்பது தெரியாது. அல்லது இதுவே சிறந்த உதாரணம் என்று அவர்

கருதினாரா? என்பதும் தெரியாது. எவ்வாறிருப்பினும் அவர் இவ்வாறு கூறினார்: நீங்கள் நாய்களை கொண்டு வாருங்கள். அதனை ஒரு காலம் வரை பட்டினியாக வையுங்கள். அதன் பிறகு அவைகளுக்கு முன் இறைச்சியை வைத்து விடுங்கள். அவை தங்களுக்குள் சண்டையிடத் தொடங்கி விடும். ஆனால் நீங்கள் அதே நாய்களுக்கு முன்னால் அப்போது ஒரு சிங்கத்தை விட்டு விட்டால் இரண்டு நாய்களும் தங்களுக்கிடையிலான பிரச்சனையை மறந்து சிங்கத்தை தாக்க தொடங்கி விடும். இந்த உதாரணம் மூலம் அவர் கூற விரும்பிய கருத்து இதுதான். அதாவது அரசனே! நீ ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் முஆவியா அவர்களின் கருத்து வேறுபாடுகளிலிருந்து பயனடைய விரும்புகின்றாய். ஆனால் நான் கூறுகின்றேன்: வெளியிலிருந்து சண்டைக்கான கேள்வி எழும்போதெல்லாம் இவர்கள் இருவரும் தங்களுக்கிடையிலான பிரச்சனைகளை மறந்து விடுவார்கள். மேலும் எதிரிக்கு எதிராக ஒன்றுதிரண்டு விடுவார்கள்.

பின்னர் அவ்வாறே நடந்தது. ஹஸ்ரத் முஆவியா அவர்களுக்கு ரோமானிய பேரரசரின் நடவடிக்கை பற்றி தெரிய வந்தபோது அவர் ஒரு தூதுச் செய்தியை அனுப்பி வைத்தார்கள். அதில் கூறினார்கள்: எங்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளிலிருந்து பயனடைந்து நீர் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்கலாம் என்று விரும்புகின்றீர். ஆனால் நான் ஒன்றை தெளிவுபடுத்திக் கொள்கின்றேன். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் நிச்சயமாக எனக்கு சண்டை உள்ளது. ஆனால் உமது படை தாக்குதல் நடத்தினால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் படையின் சார்பாக உமது படையை எதிர்கொள்ளும் முதலாவது தளபதியாக நானே இருப்பேன் என்று ஹஸ்ரத் முஆவியா அவர்கள் கூறினார்கள்.

**(1956 ஆம் ஆண்டு மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மர்கஸிய்யா கே ஸாலானா இஜ்திமாவில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு, அன்வாருல் உலூம் தொகுதி 25 பக்கம் 416,417)**

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறி வந்ததாக அன்னார் கூறுகின்றார்கள்: எங்களில் திருக்குர்ஆனை எல்லாரையும் விட சிறந்த முறையில் ஓதக்கூடியவர் அபீ பின் கஅப் ஆவார்கள். மேலும் எங்களில் சிறந்த தீர்ப்பு வழங்குபவர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஆவார்கள். **(சஹீஹுல் புகாரி, கிதாபுத் தஃப்ஸீர், ஹதீஸ் எண் 4481)**

ஹஸ்ரத் உம்மே அதிய்யா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறை ஒரு படையை அனுப்பினார்கள். அதில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் இருந்தார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இவ்வாறு துஆ செய்தவாறு செவியுற்றேன் என்று அன்னார் கூறுகின்றார்கள்: அதாவது அல்லாஹ்வே! எனக்கு நீ அலியை காட்டிவிடாத வரை எனக்கு மரணத்தை தந்துவிடாதே என்று துஆ செய்தார்கள்.

**(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 100 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை ஒரு போருக்கு அனுப்பி வைத்தார்கள். அன்னார் திரும்பி வந்த உடன் உம்மிடம் அல்லாஹ்வும், அவனது தூதரும், ஜிப்ராயீல் அவர்களும் திருப்தி கொண்டுள்ளனர் என்று கூறினார்கள். **(கன்ஸுல் உம்மால் தொகுதி 13 பக்கம் 107 ஹதீஸ் எண் 36349 – 1985 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

ஓரிடத்தில் ஒரு சம்பவம் வருகின்றது. அமீர் முஆவியா ஸரார் சவுதாயி என்பவரிடம், நீங்கள் எனக்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் பண்புகளை கூறுங்கள் என்று கேட்டார்கள். அதற்கு அமீருல் மூமினீன் அவர்களே! என்னை மன்னித்து விடுங்கள் என்று அவர் கூறினார். எனினும் நீர் கண்டிப்பாக கூறியே ஆக வேண்டும் என்று அமீர் முஆவியா கூறினார். நிலைமை இவ்வாறென்றால் பின்னர் நான் கூறுகின்றேன். கேளுங்கள் என்று அவர் கூறினார். இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மிகவும் தைரியசாலியாகவும், உறுதியான ஆற்றலுக்கு சொந்தக்காரராகவும் திகழ்ந்தார்கள். முழுமையான தீர்ப்பை வழங்கக்கூடியவராகவும், நீதியுடன் தீர்ப்பு வழங்கக் கூடியவராகவும் திகழ்ந்தார்கள். மேலும் அன்னார் அறிவு மற்றும் ஞானத்தின் நீரூற்றாக திகழ்ந்தார்கள். அன்னாரின் பேச்சுக்களில் நுட்பமான ஞானம் வெளிப்பட்டு வந்தது. அன்னார் உலகம் மற்றும் அதன் ஆடம்பரங்களிலிருந்து வெறுப்பை வெளிப்படுத்தி வந்தார்கள். இரவு மற்றும் அதன் தனிமையின் மீது அன்பு கொண்டிருந்தார்கள்.

அன்னார் மிகவும் அழக் கூடியவராகவும், மிகவும் ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய மனிதராகவும் திகழ்ந்தார்கள். மிக எளிமையான ஆடை அணியக் கூடியவராகவும், சாதாரண உணவை விரும்பக் கூடியவராகவும் இருந்தார்கள். அன்னார் எங்களுக்கு மத்தியில் ஒரு சாதாரண மனிதரைப் போன்று எங்களுடன் இருந்து வந்தார்கள். நாங்கள் கேள்வி கேட்டால் அதற்கு பதிலளித்து வந்தார்கள். ஏதாவதொரு சம்பவத்தைப் பற்றி கேட்டால் எங்களுக்கு அது பற்றி கூறி வந்தார்கள். இறைவன் மீது ஆணையாக! எங்களுக்கு அன்னார் மீதும் அன்னாருக்கு எங்கள் மீதும் அன்பு மற்றும் நெருக்கத்திற்கான பெரும் தொடர்பு இருந்தது. எனினும் அன்னாரின் திகிலின் காரணமாக நாங்கள் குறைவாகவே பேசி வந்தோம். அன்னார் மார்க்க பற்று கொண்டவர்களை கண்ணியப்படுத்தி வந்தார்கள். ஏழைகளுக்கு தனக்கு அருகில் இடமளித்து வந்தார்கள். தனது பொய்யால் தனது கூற்றை அன்னாரை ஏற்கச் செய்து விடலாம் என்று எந்த வலிமைமிக்க நபரும் எண்ணம் கொள்ள முடியாது. எந்தவொரு பலவீனமான மனிதரும் அன்னாரின் நீதி, நேர்மையிலிருந்து நிராசையடைந்தது கிடையாது.

இறைவன் மீது ஆணையாக! சில சந்தர்ப்பங்களில் நான் கண்டுள்ளேன். இரவு சூழ்ந்து விடும்போது நட்சத்திரங்கள் ஒளி இழந்து விடும்போது அன்னார் தனது தாடியைப் பிடித்து பாம்பு கடித்த மனிதன் துடிப்பதைப்போன்று துடிப்பார்கள். மேலும் மிகவும் வேதனையுற்ற நபரைப் போன்று அழுவார்கள். மேலும் உலகமே! நீ செல். என்னைத் தவிர்த்து வேறு ஒருவரை நீ ஏமாற்று. நீ என்னை ஏமாற்ற பார்க்கின்றாயா? நீ என்ன விரும்புகின்றாயோ அது ஒருபோதும் நடைபெறாது. அது ஒருபோதும் நடைபெறாது. நான் மீண்டும் திரும்ப முடியாத மூன்று தலாக்குளை உனக்கு கொடுத்து விட்டேன். ஏனென்றால் உனது வயது மிகக் குறைவாகும். உனக்கு எந்த அந்தஸ்தும் இல்லை என்று கூறுவார்கள். இது அன்னார் உருவக மொழியில் உலகத்துடன் பேசிய விஷயங்களாகும்.

அந்தோ! வழிப்பாதை உணவு குறைவாக உள்ளது. பயணமோ நீண்டதாகவும், வழியோ அபாயகரமானதாகவும் உள்ளது. அன்னாரின் பண்புகளைக் குறித்த இந்த விஷயங்களைக் கேட்டு ஹஸ்ரத் முஆவியா அவர்களும் அழுதார்கள். மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வே! அபுல் ஹஸன் மீது நீ கருணை காட்டுவாயாக. இறைவன் மீது ஆணையாக! நீர் கூறியவாறே அன்னார் இருந்தார்கள் என்று கூறியவாறு ஸராரே! ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் மரணச் செய்தி உமக்கு எவ்வாறு வேதனை அளித்தது? என்று கேட்டார்கள். அதற்கு தாயின் மடியிலேயே குழந்தை அறுக்கப்படும்போது அந்த தாய்க்கு ஏற்படும் வேதனையைப் போன்று எனக்கு வேதனை ஏற்பட்டது என்று ஹஸ்ரத் ஸரார் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.

**(அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்தில் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 1107,1108 – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் நீதிமன்ற வழக்குகளில் பிரபலமான சில தீர்ப்புகளைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். அதனை அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் காலத்தில் நடைபெற்ற இந்த சம்பவம் திப்ரியில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இஸ்லாத்தின் ஆரம்பம் முதல் நடுநிலையுடன் செயல்பாடுகள் அமைந்து வந்தன.

அதல் பின் உஸ்மான் அவர்கள் அறிவிக்கின்றார்கள். அதாவது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அந்த அறிவிப்பின் அனைத்து அரபி வாக்கியங்களையும் எழுதியுள்ளார்கள். நான் தற்போது அதை விட்டு விடுகின்றேன். குத்பா அச்சில் வெளிவரும்போது இன்ஷா அல்லாஹ் அந்த அரபி வாக்கியங்கள் அதில் எழுதப்படும்.

رَاَیۡتُ عَلِیًّا عَمَّ خَارِجًا مِنۡ هَمۡدَانَ فَرَاٰی فِئَتَیۡنِ تَقۡتُلَانِ فَفَرَّقَ بَیۡنَهُمَا ثُمَّ مَضٰی فَسَمِعَ صَوۡتًا یَاغَوۡثًا بِاللّٰهِ فَخَرَجَ یَحُضُّ نَحۡوَهٗ حَتّٰی سَمِعۡتُ خَفۡقَ نَعۡلِهٖ وَهُوَ یَقُوۡلُ اَتَاكَ الۡغَوۡثُ فَاِذَا رَجُلٌ یُلَازِمُ رَجُلًا فَقَالَ یَا اَمِیۡرَ الۡمُؤۡمِنِیۡنَ بِعۡتُ مِنۡ هٰذَا ثَوۡبًا بِتِسۡعَةِ دَرَاهِمَ وَشَرَطۡتُ عَلَیۡهِ اَنۡ لَّا یُعۡطِیَنِیۡ مَغۡمُوۡرًا وَلَا مَقۡطُوۡعًا وَكَانَ شَرۡطُهُمۡ یَوۡمَئِذٍ فَاَتَیۡتُهٗ بِهٰذِهِ الدَّرَاهِمِ لِیُبَدِّلَهَا لِیۡ فَاَبٰی فَلَزِمۡتُهٗ فَلَطَمَنِیۡ فَقَالَ اَبۡدِلۡهُ فَقَالَ بَیِّنَتُكَ عَلَی اللَّطۡمَةِ فَاَتَاهُ بِالۡبَیِّنَةِ فَاَقۡعَدَهٗ ثُمَّ قَالَ دُوۡنَكَ فَاقۡتَصَّ فَقَالَ اِنِّیۡ قَدۡ عَفَوۡتُ یَا اَمِیۡرَ الۡمُؤۡمِنِیۡنَ قَالَ اِنَّمَا اَرَدۡتُ اَنۡ اَحۡتَاطَهٗ فِیۡ حَقِّكَ ثُمَّ ضَرَبَ الرَّجُلَ تِسۡعَ دُرَّاتٍ وَقَالَ هٰذَا حَقُّ السُّلۡطَانِ۔

தற்போது நான் அதன் மொழியாக்கத்தை எடுத்து வைக்கின்றேன். அதன் மொழியாக்கம் இவ்வாறாகும். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹம்தான் நகரத்திலிருந்து வெளியில் தங்கியிருந்தார்கள் என்பதை நான் கண்டேன். இதற்கிடையில் இரு கூட்டத்தினர் தங்களுக்குள் சண்டையிட்டதை அன்னார் பார்த்தார்கள். அன்னார் அவர்களுக்கு மத்தியில் சமாதானம் செய்து வைத்தார்கள். ஆனால் சற்று தூரம் சென்ற உடன் இறைவனுக்காக யாராவது உதவிக்கு வாருங்கள் என்ற ஒருவரின் குரல் அன்னாருக்கு கேட்டது. எனவே அன்னார் வேகமாக அந்த குரல் வந்த திசையை நோக்கிச் சென்றார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னாரின் காலணிகளின் சப்தமும் வந்து கொண்டிருந்தது. மேலும் உதவி வந்து விட்டது; உதவி வந்து விட்டது என்று கூறியவாரே அன்னார் அந்த நபரை நோக்கி சென்று கொண்டிருந்தார்கள். அன்னார் அந்த இடத்திற்கு அருகில் சென்றடைந்தபோது ஒருவர் மற்றொருவரை பிடித்து வைத்திருப்பதை அன்னார் கண்டார்கள்.

அந்த நபர் கூறினார்: அமீருல் மூமினீன் அவர்களே! நான் இந்த நபரிடம் ஓர் ஆடையை 9 திர்ஹம் தொகைக்கு விற்றேன். மேலும் கொடுக்கப்படும் பணத்தில் அதாவது திர்ஹமில் ஏதாவது சந்தேகம் இருந்தால் அல்லது கிழிந்திருந்தால் அதை அவர் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் வியாபாரம் செய்தேன். விற்கக்கூடியவரிடம் வாங்கக்கூடியவர் இவ்வாறு ஒப்பந்தம் செய்திருந்தார். நான் இன்று பாதிப்படைந்த நோட்டுகளை திருப்பிக் கொடுக்க வந்தபோது அவர் அதனை மாற்றித் தர மறுத்து விட்டார். நான் அவரை பின்தொடர்ந்தபோது என்னை அவர் கண்ணத்தில் அறைந்து விட்டார். எனவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அந்த நபரிடம் அந்த நோட்டுகளை மாற்றிக் கொடுக்கும்படி கூறினார்கள். மேலும் வாடிக்கையாளர்களிடம் அவர் உம்மை கண்ணத்தில் அறைந்ததற்கு ஆதாரம் கொடுக்கும்படி கூறினார்கள். அவரும் ஆதாரத்தை கொடுத்து விட்டார்.

எனவே அடித்தவரை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அமர்த்தினார்கள். மேலும் அவரை பழிவாங்கும்படி அடிவாங்கியவரிடம் கூறினார்கள். அதற்கு அவர் அமீருல் மூமினீன் அவர்களே! நான் இவரை மன்னித்து விட்டேன் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் நீர் அவரை மன்னித்து விட்டீர். ஆனால் நான் உமது உரிமையில் எச்சரிக்கையுடன் செயல்பட விரும்புகின்றேன் என்று கூறினார்கள். அதாவது அந்த நபர் பாமர மனிதராக இருந்தார். தனது பயன் மற்றும் பாதிப்பை பற்றி அவர் புரியாதவராக இருந்தார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: எந்த நபர் அடித்திருந்தாரோ அவருக்கு ஏழு சவுக்கடி கொடுக்கப்பட்டது. மேலும் அந்த நபர் உம்மை மன்னித்து விட்டார். ஆனால் இது அரசாங்கத்தின் சார்பான தண்டனையாகும் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 362,363)

மற்றொரு சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் செயலிலிருந்து நமக்கு ஓர் அழகிய படிப்பினை கிடைக்கின்றது. ஒருவர் மற்றொருவரை தாக்கியதை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கண்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அவரைத் தடுத்தார்கள். அநீதியிழைக்கப்பட்டவரிடம் நீர் அவரை அடியும் என்று கூறினார்கள். ஆனால் நான் அவரை மன்னித்து விடுகின்றேன் என்று அநீதியிழைக்கப்பட்டவர் கூறினார். அப்போது அச்சத்தின் காரணமாக அவர் அவரை அடிக்க மறுத்து விட்டார் என்பதை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் புரிந்து கொண்டார்கள். ஏனென்றால் அடித்தவர் மிகவும் ஆதிக்கம் கொண்டவராக இருந்தார்.

எனவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உங்களது உரிமையை விட்டுக் கொடுத்து விட்டீர்கள். ஆனால் நான் சமுதாய உரிமையை பயன்படுத்துகின்றேன். எந்த அளவிற்கு அந்த நபர் பலவீனமான நபரை அடித்திருந்தாரோ அதே அளவிற்கு அவருக்கு அடி கொடுக்கப்பட்டது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 331)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சம்பவமாகும். அன்னாரின் மீது ஒரு வழக்கு இஸ்லாமிய நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டது. அப்போது நீதிபதி ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு சிறிது சலுகை காட்டினார். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இது நீர் செய்த முதல் அநீதியாகும். நானும் இவரும் தற்போது சமமானவர்கள் ஆவோம் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 16 பக்கம் 516)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சிறப்புகளை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் சமுதாயத்தில் எல்லாரையும் விட சிறந்த பேச்சாற்றல் கொண்டவராகவும், அறிவுரை வழங்குபவர்களாகவும் இருக்கவில்லையா? அன்னார் சொற்களுக்கு உயிர் கொடுத்து வந்தார்கள். தனது தெளிவான அழகிய பேச்சின் தாக்கத்தால் கேட்பவர்களை தனது ஈர்ப்பு சக்தி கொண்ட தாக்கத்தால் ஒன்றுகூட்டி வந்தார்கள். அவ்வாறு செய்வதற்கு அன்னாருக்கு ஒரு மணி நேரம் போதுமானதாக இருந்தது. இன்னும் கூறப்போனால் அதை விட குறைந்த நேரமே போதுமானதாகும்.

(சிர்ருல் குலாஃபா, ரூஹானி கஸாயின் தொகுதி 8 பக்கம் 350 – ரப்வாவிலுள்ள நஸாரத் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் சிறிது காலம் அவர்களை விட்டு விலகி விடுவீராக. மேலும் நீர் நன்கு பார்த்துக் கொண்டிருப்பீராக. நிச்சயமாக அவர்களும் (தங்கள் முடிவைக்) கண்டுகொள்வர். (37:179,180)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) ஆகியோரின் நிறங்களை தன்னிடத்தில் ஏற்படுத்திக் கொள்ளாத வரை எந்தவொரு நபரும் முஸ்லிமாகவும், நம்பிக்கை கொண்டவராகவும் இருக்க முடியாது. அவர்கள் உலகத்தை நேசித்ததில்லை. மாறாக தமது வாழ்க்கையை இறைவழியில் அர்ப்பணித்திருந்தார்கள்.

(லெக்சர் லூதியானா, ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 294)

பின்னர் அன்னார் கூறுகின்றார்கள்: ஹவாரிஜ்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை தீயவர் என்று குறிப்பிடுகின்றனர். ஏராளமான காரியங்களை இறையச்சத்திற்கு மாற்றமாக அன்னாரைப் பற்றி பேசுகின்றனர். இன்னும் கூறப்போனால், நம்பிக்கை கொண்டவர்களை விட்டு வெளியேறியவராக அன்னாரை இவர்கள் கருதுகின்றனர். அதாவது அன்னாரிடம் ஈமான் இருந்திருக்கவில்லை. ஈமானிய அணிகலனிலிருந்து அன்னார் விலகி இருந்தார்கள் என்றும் கருதுகின்றனர். அவ்வாறென்றால் இந்த இடத்தில் இயல்பாகவே இந்த கேள்வி எழுகின்றது.

சித்தீக்கிற்கு இறையச்சம் மற்றும் நேர்மை என்ற நிபந்தனை உள்ளது. அவ்வாறிருக்க நபி, ரஸூல், வலிமார்கள் ஆகியோரின் நிலைகளை மக்களின் பார்வையிலிருந்து இறைவன் ஏன் சந்தேகத்திற்குரியதாக வைத்திருந்தான்? அவர்களின் நிலைமையைப் பற்றி ஏன் மக்களால் புரிய முடியவில்லை? அவர்களின் எல்லா நிலைமைகளும் முன்மாதிரிகளும் ஏன் சந்தேகத்திற்குரியதாக உள்ளது? அந்த நல்லடியார்களின் செயல்களையும், சொற்களையும் ஏன் மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை? அவர்களின் இறையச்சத்தின் வட்டம் அந்த நல்லடியார்களின் உண்மையை, நேர்மையை புரிவதிலிருந்து வெளியேறியுள்ளது.

மேலும் நல்லடியார்களை அநீதி இழைக்கக்கூடியவர்கள் என்றும், ஹராமான செல்வங்களை உண்ணக் கூடியவர்கள் என்றும் அநியாயமாக கொலை செய்யக்கூடியவர்கள் என்றும் மேலும் வரம்பு மீறியவர்கள் என்றும் உடன்படிக்கை மீறுபவர்கள் என்றும் நஃப்ஸை வணங்குபவர்கள், குற்றத் தொழில் புரிபவர்கள் என்றும் மக்கள் ஏன் எண்ணம் கொண்டனர்?

ஆனால் உலகில் ஏராளமான மக்கள் இவ்வாறும் காணப்படுகின்றனர். அதாவது அவர்கள் தம்மை ரஸூல் என்றும் வாதம் செய்வதில்லை. நபி என்றும், தன்னை வலி என்றும், இமாம் மற்றும் கலீஃபத்துல் முஸ்லிமீன் என்றும் வாதம் செய்வதில்லை. ஆயினும் அவர்களின் நடவடிக்கைகளிலோ, அல்லது அவர்களின் வாழ்க்கையிலோ எந்த ஆட்சேபனையும் செய்யப்படுவதில்லை. இதற்குரிய பதில் என்னவென்றால், இறைவன் அவ்வாறே செய்கின்றான். ஏனெனில் தனது சிறப்பான ஒப்புக் கொள்ளப்பட்ட இறை நேசர்களை தீயவர்களின் நடவடிக்கைகள், பழக்க வழக்கங்கள், தப்பெண்ணங்கள் ஆகியவற்றிலிருந்து மறைவாக வைக்கின்றான்.

(தர்யாக்குல் குலூப், ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் 422 அடிக்குறிப்பு)

**திருக்குர்ஆனிலிருந்து...**

தூதர்களுக்கு என்றென்றும் சாந்தி நிலவுவதாக.
உலகங்களுக்கெல்லாம் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். (37:182,183)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

அதாவது தீயவர்கள் சுயமே கூறுகின்றார்கள். அவர்கள் தப்பெண்ணம் கொள்ளக்கூடியவர்கள், தன்னைத்தானே அல்லாஹ் மறைவாக வைத்திருப்பதைப் போன்று அந்த நல்லடியார்களையும் அல்லாஹ் மறைவாக வைத்துள்ளான். அல்லாஹ்வின் மீதும் அவர்கள் தப்பெண்ணம் கொள்கின்றனர். அவனது நெருக்கத்தை பெற்றவர்கள் மீதும் அந்த தீய மக்கள் அதேபோன்று தப்பெண்ணம் கொள்கின்றனர். அவர்கள் விரைவாக ஆட்சேபனை செய்யக்கூடியவர்கள். இப்படிப்பட்ட மக்களுக்கு இறையச்சம் இருப்பதில்லை. எனவே அவர்கள் இறையச்சமுடையவர்கள் மீது பழி சுமத்துகின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் உண்மையைத் தேடுபவர்களின் நம்பிக்கைக்கு உகந்தவராகவும், வள்ளல்களுக்கு நிகரற்ற முன்மாதிரியாகவும் இறையடியார்களுக்கு சான்றை பூர்த்தி செய்யக்கூடியவர்களாகவும் திகழ்ந்தார்கள் என்பதில் அணுவளவும் ஐயமில்லை. மேலும் இவர்கள் தம் காலத்து மக்களில் சிறந்த மனிதராகவும் நாடுகளை ஒளிரச் செய்ய அல்லாஹ்வின் ஒளியாகவும் இருந்தார்கள். ஆனால் அன்னாரின் கிலாஃபத் காலகட்டம் அமைதி நிறைந்த காலகட்டமாக இருந்திருக்கவில்லை. மாறாக குழப்பங்கள் மற்றும் அநீதிகள் எனும் மந்தமான காற்று வீசக்கூடிய காலமாக இருந்தது. அன்னார் மற்றும் அபூ சுஃப்யானின் மகனின் கிலாஃபத் தொடர்பாக பொது மக்கள் கருத்து வேறுபாடு கொண்டார்கள்.

அவர்கள் இருவரை நோக்கியும் வியப்படைந்த மனிதனைப் போன்று கண் இமைக்காமல் பார்த்து வந்தனர். சில மக்களோ இவர்கள் இருவரையும் விண்ணிலுள்ள எனப்படும் இரு நட்சத்திரங்களுக்கு ஒப்பாக கற்பனை செய்து வந்தார்கள். இருவரையும் அந்தஸ்தில் சரிசமமானவர்களாகக் கருதி வந்தனர். ஆனால் உண்மை என்னவென்றால், உண்மை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களோடு இருந்தது. எவர் அன்னாரது காலத்தில் அன்னாருடன் போரிட்டாரோ அவர் கிளர்ச்சியும் கலகமும் செய்தார்.

(சிர்ருல் குலாஃபா, ரூஹானி கஸாயின் தொகுதி 8 பக்கம் 352,353 – ரப்வாவிலுள்ள நஸாரத் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் சித்தீக்கே அக்பர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஃபாரூக் உமர் (ரலி), ஹஸ்ரத் துல்நூரைன் (உஸ்மான் – ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி முர்தஸா (ரலி) ஆகிய அனைவரும் உண்மையிலேயே மார்க்கத்தில் அமீனாக திகழ்ந்தார்கள் என்பது நமது நம்பிக்கையாகும்.

(மக்தூபாத்தே அஹ்மத் தொகுதி 2 பக்கம் 151)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் உயர்வான அந்தஸ்தையும் எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இறையச்சமுடையவர்களாகவும், தூய அகத்தைக் கொண்டவர்களாகவும், ரஹ்மானாகிய இறைவனனிடம் மிகவும் அன்பிற்குரியவர்களாகத் திகழ்ந்த மக்களைச் சார்ந்தவர்களாகவும் இருந்தார்கள். அன்னார் சமுதாயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும் தம் காலத்து தலைவர்களில் ஒருவராகவும் இருந்தார்கள். அன்னார் ஆதிக்கம் பெற்ற இறைவனின் சிங்கமாகவும், கருணை கொண்ட இறைவனின் வீரராகவும், வள்ளல் தன்மை கொண்டவராகவும், தூய உள்ளம் கொண்டவராகவும் இருந்தார்கள். அன்னார் எத்தகைய தனிச்சிறப்புமிக்க வீரராக இருந்தார்கள் எனில் போர்க்களத்தில் தமது இடத்தை விடடு அகன்று விட மாட்டார்கள். அவர்களுக்கு எதிராக பகைவர்களின் ஒரு படையே இருந்தாலும் சரியே! அன்னார்

வாழ்நாள் முழுவதையும் ஏழ்மையில் கழித்தார்கள். மனித குலத்தின் தூய்மையின் தரத்தின் உச்சத்தை எட்டியிருந்தார்கள். இவர்கள் செல்வங்களை வாரி வழங்குவதிலும் மக்களின் துக்கங்களையும் துயரங்களையும் களைவதிலும், அனாதைகள், ஏழைகள் மற்றும் அண்டை அயலார்களை கவனத்தில் கொள்வதிலும் முதல் தரத்திலிருந்த ஆடவர் ஆவார்கள்.

அன்னார் போர்களில் பல வகையான வீரச் செயல்களைச் செய்து காட்டினார்கள். அம்பு மற்றும் வாட்போர்களில் அன்னாரிடமிருந்து வியப்பூட்டும் நிகழ்வுகள் வெளிப்பட்டு வந்தன. அத்துடன் இவர்கள் மென்மையான மொழியை பேசக்கூடியவர்களாகவும் பேச்சாற்றல் கொண்டவர்களாகவும் திகழ்ந்தார்கள். அன்னாரின் சொற்பொழிவு உள்ளத்தின் ஆழத்தில் இறங்கும். அதனால், மூளைகளில் ஏற்பட்டிருந்த துரு பிடிப்பு தூய்மையடைந்து வந்தது. அடையாளங்களின் ஒளிகளால் அன்னாரின் முகம் பிரகாசம் அடைந்து வந்தது. இவர்கள் வகை வகையான எடுத்துரைக்கும் போதனைகளில் ஆற்றல் பெற்றிருந்தார்கள். எவர் அன்னாரிடம் இவ்விஷயங்களில் போட்டியிடுவாரோ அவருக்கு ஒரு தோல்வியுற்ற நபரைப் போன்று அன்னாரிடம் மன்னிப்புக் கோர வேண்டி வந்தது. அன்னார் எல்லாச் சிறப்புகளிலும், மொழி வளத்திலும் சொற்பொழிவுத்திறனின் வழிகளிலும் முழுமை பெற்றவர்களாக திகழ்ந்தார்கள். எவர் அன்னாரின் மேன்மையை நிராகரித்தாரோ அவர் வெட்கக்கேடான வழியை மேற்கொண்டவர் ஆவார்.

அன்னார் இயலாதவர்களின் துயர் ஆற்றுவதன் பால் கவனமூட்டி வந்தார்கள். சிக்கனமாக வாழ்வைக் கழிப்பவர்களுக்கும் போதுமான நிலையில் உள்ளவர்களுக்கும் உணவளிக்க கட்டளை பிறப்பித்து வந்தார்கள். அவர்கள் அல்லாஹ்வின் நெருக்கமான மக்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அத்துடன் அவர்கள் திருமறையின் அமிர்தத்தைப் பருகுவதில் முன்னிருப்பவர்களாக இருந்தார்கள். திருக்குர்ஆனின் ஞானமும் அவர்களுக்குக் கிடைக்கப் பெற்றிருந்தது. மிகவும் மேலோங்கியிருந்தார்கள். அன்னாருக்கு திருக்குர்ஆனின் ஆழங்களைப் புரிவதில் ஒரு விநோதமான புரிதிறன் வழங்கப்பட்டிருந்தது.

நான் விழித்திருக்கும் நிலையில் அன்னாரைக் கண்டேன். (அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை சந்தித்தார்கள். விழித்திருக்கும் நிலையில் கஷ்ஃப் காட்சியில் கண்டார்கள். உறக்கத்தில் அல்ல). பிறகு இதே நிலையிலேயே அவர்கள் அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், மறைவானவற்றை அறிந்திருக்கும் இறைவனின் திருமறையின் விரிவுரையை எனக்கு வழங்கினார்கள். இது எனது தஃப்ஸீர் ஆகும். இது தற்போது தங்களுக்கு வழங்கப்படுகிறது. ஆக தங்களுக்கு இந்த அன்பளிப்பு அருளுக்குரியதாகட்டும் என்று கூறினார்கள். பிறகு நான் எனது கையை நீட்டினேன். அந்த தஃப்ஸீரைப் பெற்றுக் கொண்டேன். மேலும் நான் வணங்கக்கூடிய வல்லமை படைத்த அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினனே.

பிறகு நான் அவர்களை அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை படைப்பினங்களில் மிகவும் தகுதியானவர்களாகவும், ஒழுக்கத்தில் உறுதியானவர்களாகவும் தன்னடக்கம் மற்றும் பணிவான இயல்பை உடையவர்களாகவும், மின்னக்கூடியவர்களாகவும் ஒளிரக் கூடியவர்களாகவும் காணப் பெற்றேன். அன்னார் என்னை மிகவும் அன்பு நேசத்துடன் சந்தித்தார்கள் என்று நான் சத்தியமிட்டுக் கூறுகின்றேன்.

அன்னார் என்னையும் எனது கொள்கையையும் அறிவார்கள் என்றும் எனது நிலைபாட்டிலும் கொள்கையிலும் ஷியாக்களோடு கொண்டுள்ள கருத்து வேறுபாடுகளையும் அன்னார் அறிவார்கள் என்றும் எனது உள்ளத்தில் போடப்பட்டது. ஆனால் அவர்கள் எவ்வகையிலும் விருப்பமின்மையையும், வெறுப்பையும் வெளிப்படுத்தவில்லை. என்னிடமிருந்து விலகவுமில்லை. மாறாக, அவர்கள் என்னைச் சந்தித்தார்கள். கலப்பற்ற அன்பர்களைப் போன்று என்னுடன் அன்பு செலுத்தினார்கள். அவர்கள் உண்மையான, தூய்மையான உள்ளம் கொண்ட மக்களைப் போன்று அன்பை வெளிப்படுத்தினார்கள்.

அவர்களுடன் ஹஸ்ரத் ஹஸன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) இருவரும் மற்றும் தூதர்களின் தலைவர் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்களும் உடனிருந்தார்கள். அவர்களுடன் மிகவும் அழகான தோற்றம் கொண்ட, நல்லவர்களான, கம்பீரமிக்க, அருளுக்குரிய, தூய்மையான, மரியாதைக்குரிய, ஒழுக்கமுடைய அகமும் புறமும் ஒளியின் இருப்பிடமாக இருந்த பெண்மணியும் இருந்தார்கள்.

அவர்களை நான் கவலைமிக்கவர்களாக காணப் பெற்றேன். ஆனால் அவர்கள் அதை மறைத்திருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமத்துஸ் ஸுஹரா என்று எனது உள்ளத்தில் போடப்பட்டது. அவர்கள் என்னிடம் வருகை தந்தார்கள். நான் படுத்திருந்தேன். அவர்கள் அமர்ந்து விட்டார்கள். அவர்கள் எனது தலையை தன் மடி மீது வைத்துக் கொண்டார்கள். பரிவை வெளிப்படுத்தினார்கள். அவர்கள் எனது ஏதோவொரு கவலையின் காரணமாக கவலையோடும் வேதனையோடும் இருக்கிறார்கள் என்பதையும், குழந்தைகளின் கஷ்டத்தின்போது தாய்மார்கள் காட்டுவதைப் போன்று பரிவையும் அன்பையும் நிம்மதியின்மையையும் வெளிப்படுத்துகின்றார்கள் என்பதையும் நான் கண்டேன்.

(இதன் மீதும் ஜமாஅத்தைச் சாராத சில மக்கள் இவ்வாறு ஆட்சேபனை செய்கின்றனர். இதைப் பாருங்கள். இது எவ்வளவு தவறான விஷயமாகும். தொடையில் தலையை வைத்து விட்டார் என்று கூறுகின்றனர். ஆனால் இங்கு தாயின் உதாரணம் கூறப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய கூற்றுக்களைப் பார்த்தால் மேலும் கூறப்பட்டுள்ள பண்புகளை அவர்கள் கவனமாக படித்தால் அவர்களுக்கு புரிய வரும். மேலும் தாயைப் போன்று பரிவுடனும், நேசத்துடனும் என்ற வரியைப் படித்தால் அவர்களின் அனைத்து ஆட்சேபனையும் நீங்கி விடும். ஆயினும் இந்த அசுத்தமான மூளை கொண்டவர்கள் மக்களுக்கு மத்தியில் ஆட்சேபனை செய்து கொண்டே இருக்கின்றனர்)

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பிறகு எனக்கு கூறப்பட்டது. மார்க்கத் தொடர்பில் அவர்கள் பார்வையில் அதாவது ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் பார்வையில் எனது அந்தஸ்து ஒரு மகனின் அந்தஸ்தைப் போன்றதாகும். பிறகு எனது உள்ளத்தில் எண்ணம் தோன்றியது. அதாவது அவர்கள் கவலையுறுவது எதைக் குறிக்கிறதென்றால், சமுதாயம், நாட்டு மக்கள் மற்றும் பகைவர்களிடமிருந்து என்மீது செய்யப்படும் அநீதிகளை நினைத்து கவலையுற்றிருந்தார்கள். எனது மகன் இந்த அநீதிகளைப் பார்க்க வேண்டியது வரும் என்று நினைத்து ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் கவலையுற்றிருந்தார்கள். பிறகு ஹஸ்ரத் ஹஸன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) ஆகியோர் என்னிடம் வந்தார்கள். சகோதரர்களைப் போன்று என்னிடம் அன்பை

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்களுக்கு அறிவுரை கூறப்பட்டால், அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. அவர்கள் எந்த ஓர் அடையாளத்தைக் காணும் போதும் (அதனை) ஏளனமாகக் கருதுகின்றனர். (37:14,15)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

வெளிப்டுத்தினார்கள். அனுதாபிகளைப் போன்று என்னைச் சந்தித்தார்கள். இந்தக் கஷ்ஃப் விழித்திருக்கும்போது வரும் கஷ்ஃப்புகளில் ஒன்றாக இருந்தது. இது நடந்து பல வருடங்கள் கழிந்து விட்டன. எனக்கு ஹஸ்ரத் ஹஸன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) ஆகியவர்களோடு ஒரு உன்னதமான தொடர்பு உள்ளது. இந்தத் தொடர்பின் உண்மைத்துவம் கிழக்கு மற்றும் மேற்கின் இறைவனைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது.

நான் ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் அவர்களின் இரு புதல்வர்கள் மீதும் அன்பு செலுத்துகிறேன். எவர் அவர்களோடு பகைமை கொள்வாரோ அவரோடு நான் பகைமை கொள்கிறேன். அத்துடன் நான் கொடுமையும் பலவந்தமும் செய்யக்கூடியவன் அல்ல. அல்லாஹ் என் மீது வெளிப்படுத்தியதை விட்டு நான் முகுந்திருப்புவது எனக்கு சாத்தியமே இல்லை. நான் வரம்பு மீறுபவர்களைச் சேர்ந்தவனும் அல்ல. நீங்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்றாலும் எனது செயல் எனக்கு; உங்களது செயல் உங்களுக்கு. அல்லது எமக்கும் உங்களுக்கும் இடையில் நிச்சயமாக தீர்ப்பு வழங்குவான். தீர்ப்பு வழங்குவர்களில் அனைவரையும் விட மிகச் சிறந்த தீர்ப்பு வழங்குவன் அவனே ஆவான்.

**(சிர்ருல் குலஃபா, ரூஹானி கஸாயின் தொகுதி 8 பக்கம் 358,359 – ரப்வாவிலுள்ள நஸாரத் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)**

இத்துடன் இங்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு நிறைவு பெறுகிறது. அடுத்த நற்குறிப்பு எதிர்வரும் நாட்களில் துவங்கும். இன்ஷா அல்லாஹ்.

இந்நேரத்தில் நான் இதனையும் அறிவிப்பு செய்ய விரும்புகின்றேன். அதாவது தொழுகைகளுக்குப் பிறகு 24 மணி நேரம் ஒளிபரப்பாகும் ஒரு புதிய டிவி சேனலை நான் துவக்கி வைப்பேன். இன்ஷா அல்லாஹ். அது MTA கானா என்ற பெயரில் ஒளிபரப்பாகும். கானா நாட்டில் வஹ்ஹாப் ஆதம் ஸ்டுடியோ என்ற பெயரில் 2017 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அமீர் மிஷனரி இன்சார்ஜ் கானாவாக இருந்த மர்ஹூம் அப்துல் வஹ்ஹாப் ஆதம் சாஹிப் அவர்களின் பெயர் இந்த ஸ்டுடியோவிற்கு வைக்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும் MTA ஆப்ரிக்கா சேனலில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் 60 சதவிதம் இந்த ஸ்டுடியோவிலேயே தயாராகின்றது. அதில் 17 முழு நேர ஊழியர்கள் உள்ளனர். 60ற்கும் மேற்பட்ட தன்னார்வ தொண்டர்கள் உள்ளனர். அவர்கள் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்றுள்ளனர். வஹ்ஹாப் ஆதம் ஸ்டுடியோ கானாவின் மிகவும் நவீன ஸ்டுடியோக்களில் ஒன்றாகும். அதில் ஏராளமான சிறந்த வசதி வாய்ப்புகள் உள்ளன. பல்வேறு மீடியா அமைப்புகள் மற்றும் பிராட்காஸ்டர்கள் பயிற்சி நோக்கத்திற்காக மேலும் பணியில் அனுபவம் பெறுவதற்காக தமது ஊழியர்களை இந்த ஸ்டுடியோவிற்கு அனுப்பி வைக்கின்றனர். இந்த ஸ்டுடியோ ஏராளமான நேரலை நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியுள்ளது. அதில் ஆஃப்ரிக்காவின் முதலாவது திருக்குர்ஆன் ஓதும் போட்டி மற்றும் ரமலான் முபாரக் ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் அடங்கும்.

MTA கானா என்ற பெயரில் தற்போது துவங்கப்படும் கானாவின் டிஜிட்டல் பிளாட்ஃபார்மில் 24 மணி நேரம் ஒளிபரப்பாகக்கூடிய புதிய தேசிய டிவி சேனல் ஆகும். MTA கானா, சேட்டிலைட் டிஷ்ஷின் தேவையின்றி ஒரு சாதாரண ஏரியல் மூலமாகவே இந்த சேனலை பார்க்க முடியும். இதன் பொருள் என்னவென்றால் கானா நாட்டு மக்கள் சாதாரண ஆண்டனா மூலமாக கூட இந்த சேனலை மிக எளிதாக பார்க்க முடியும். இங்கு கானாவின் பெரும் சேனல்கள் எந்த லொகேஷனில் அமையப் பெற்றுள்ளதோ அதே லொகேஷனில் இந்த சேனலும் அமையப் பெற்றுள்ளது.

இவ்வாறு நாட்டினுடைய இலட்சக்கணக்கான தொலை தூரத்தில் வசிக்கும் குடும்பங்கள் வரை இந்த சேனல் சென்றடையும். மேலும் தெற்கிலிருந்து வடக்கு வரை முழு பகுதியையும் இந்த சேனல் கவர் செய்து விடும். இன்ஷா அல்லாஹ். கானாவின் பல்வேறு மொழிகளிலும் வஹ்ஹாப் ஆதம் ஸ்டுடியோவில் நிகழ்ச்சிகள் தயார் செய்யப்படும். அதில் ஆங்கிலம், சோயிகா, அவ்ஸா மற்றும் ஏனைய மொழிகளும் அடங்கும்.

சேனலின் டிரான்ஸ்மிஷன் மற்றும் நிகழ்ச்சி நிரல் பணிகளை அங்குள்ள லஜ்னா அமைப்பின் தன்னார்வ தொண்டர்கள் மற்றும் ஏனைய குழுவினர் மேற்கொள்வர். நல்லொழுக்கம், கல்வி மற்றும் தர்பிய்யத் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் உருவாக்கப்படும். இந்த அடிப்படையில் இஸ்லாத்தின் சரியான அழகிய போதனைகள் மக்களுக்கு தெரியப்படுத்தப்படும். இன்ஷா அல்லாஹ். அந்த நாட்டில் டிஜிட்டல் பிளாட்ஃபார்மில் இஸ்லாத்தின் சரியான போதனையை ஒளிபரப்புவதற்கு முழுமையாக அர்ப்பணித்த ஒரே சேனல் MTA கானா ஆகவே இருக்கும்.இன்ஷா அல்லாஹ்.

ஓரிடத்தில் எதிரிகள் நமது பாதையை அடைக்க முயற்சி செய்கின்றனர். அல்லாஹ் மற்றொரு இடத்தில் மேலும் பல வழிகளை திறந்து விடுகின்றான். இதுவே அல்லாஹ் ஜமாஅத்தின் மீது செய்கின்ற அருட்களாகும். எந்த பாதைகள் அடைபட்டிருக்கின்றனவோ அதுவும் தனக்குரிய நேரத்தில் திறந்து விடும். இன்ஷா அல்லாஹ். ஆனால் அல்லாஹ் அத்துடன் மகிழ்ச்சிக்கான ஏற்பாட்டையும் செய்து விடுகின்றான். ஆக இந்த சேனல் இந்த நாட்டை கவர் செய்யும். இன்ஷா அல்லாஹ். இன்னும் கூறப்போனால் அண்டை நாட்டின் சில பகுதியையும் கூட அது கவர் செய்யலாம். இன்ஷா அல்லாஹ். நான் கூறியதுபோன்று ஜுமுஆ தொழுகைகளுக்குப் பிறகு அதனை நான் துவக்கி வைப்பேன்.

இன்றைய நாட்களில் நான் கவனமூட்டி வருகின்ற இரண்டாவது விஷயம் இதுவாகும். அதாவது பாகிஸ்தான் மற்றும் அல்ஜீரியா நாட்டு இறை வழிக் கைதிகளுக்காக நீங்கள் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் குறிப்பாக அவர்களின் விடுதலைக்கான ஏற்பாட்டைச் செய்வானாக. பாகிஸ்தானின் பொதுவான நிலவரத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அங்குள்ள அஹ்மதிகளுக்கு நிம்மதியான வாழ்க்கையை கழிப்பதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. அஹ்மதிய்யத்தின் எதிரிகளுக்கு அறிவையும் புரிதலையும் வழங்குவானாக. இல்லையென்றால் அல்லாஹ் அவர்களை என்ன செய்ய வேண்டுமோ அவ்வாறு நடந்து கொள்ளட்டுமாக! மேலும் நாம் அவர்களிடமிருந்து விரைவாக விடுதலை பெறுபவர்களாக இருப்போமாக! மேலும் அஹ்மதிகளாகிய நாம் குறிப்பாக பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்கு நவாஃபில் மற்றும் துஆக்கள் மற்றும் தான தருமங்கள் மூலமாக அழுத்தம் கொடுக்க வேண்டும். அல்லாஹ் அவர்களை தனது பாதுகாப்பில் வைப்பானாக.

*(தமிழில்: அப்துர் ரஹ்மான் தாஹிர்)*

**திருக்குர்ஆனிலிருந்து...**

தூதர்களாகிய நம் அடியார்களைக் குறித்து நம் தீர்ப்பு ஏற்கனவே நிகழ்ந்து விட்டது. நிச்சயமாக அவர்களுக்கே உதவி அளிக்கப்படும். 37:172,173)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வின் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களைத் தவிர, (அவர்களுக்கு வேதனையளிக்கக்கூடிய தண்டனை அளிக்கப்படுவதில்லை). (37:41)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 18 February 2021 Issue No. 7

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபாவும், அன்னாரின் மருமகனுமாகிய ஹஸ்ரத் அலி முர்தஸா (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 11 டிசம்பர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **11 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

இவ்வாறே பாகிஸ்தானுடைய நிலைமைகளும் கடுமையாக உள்ளன. சில அதிகாரிகள் குறித்து நான் தனிப்பட்ட முறையில், அவர்கள் இவ்வாறு உள்ளார்கள் என்று கூறியிருந்தேன். அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அந்த மவ்லவிகளுக்கும் அதிகாரிகளுக்கும் அறிவைக் கொடுக்க விரும்பவில்லை. அல்லது அவர்களுக்கு அறிவு வராது. அல்லது இவ்வாறே செய்து கொண்டிருப்பதும் அல்லாஹ்வின் பிடியில் வருவதுமே அவர்களுக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றால் பிறகு அல்லாஹ் விரையில் அவர்களைப் பிடிப்பதற்கு வழி செய்வானாக. அஹ்மதிகளுக்கு எளிமையை ஏற்படுத்துவானாக.

தொழுகைக்குப் பிறகு நான் ஜனாஸா காயிப் தொழுகையும் தொழ வைப்பேன். அது ரப்வாவைச் சேர்ந்த முஹம்மத் அப்துல்லாஹ் சாஹிப் அவர்களின் மகன் ரஷீத் அஹ்மத் சாஹிப் அவர்களுடையது. இவர்கள் நமது அரபி துறையின் முரப்பியான தாஹிர் நதீம் சாஹிப் அவர்களின் தந்தையாவார்கள். அக்டோபர் 28 அன்று 76 வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

இவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவர்களின் தந்தைவழிப் பாட்டனாரான ஹஸ்ரத் அப்துல் கஃபூர் சாஹிப் அவர்களின் மூலமாக வந்தது. அவக்ரள் தமது தாயின் சகோதரியின் மகனான ஹஸ்ரத் மவ்லவி அல்லாஹ் தத் சாஹிப் (ரலி) அவர்களுடன் இணைந்து 1891,92 ல் காதியானுக்குச் சென்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கரங்களில் பைஅத் செய்தார்கள். ஹஸ்ரத் மவ்லவி அல்லாஹ் தத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதப்படிக்கத் தெரிந்த அறிஞராக இருந்தார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அன்னாரின் வாதத்திற்கு முன்னரும் சந்திப்புகள் இருந்தன. அவர்கள் தமது கனவில், ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய கொடியை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் (தம்) கரங்களில் பிடித்திருப்பதைப் பார்த்தார்கள்.

எனவே ஹஸ்ரத் மவ்லவி அல்லாஹ் தத் சாஹிப் (ரலி) அவர்கள் தமது தாயின் சகோதரியின் மகனான மவ்லவி அப்துல் கஃபூர் சாஹிப் (மர்ஹூமின் தந்தைவழிப் பாட்டனார்) அவர்களை உடன் அழைத்துக் கொண்டு காதியான் சென்றார்கள். இருவரும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள். பிற்காலத்தில், மவ்லவி அல்லாஹ் தத் சாஹிப் அவர்களின் தப்லீக்கால், அலிபூரிலும், முல்தானிலும் பல மக்கள் அஹ்மதிய்யத்தில் இணைந்தனர். ஒரு நீண்ட காலம் வரை மர்ஹூம் அவர்களுக்குத் தமது ஜமாஅத்தான ஜில்லா பஹாவல்பூரில் பொருளாளராகத் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. மர்ஹூம் மிகவும் நற்பண்புள்ள மனிதராகவும் நற்செயல் செய்யக்கூடிய மனிதராகவும், இயல்பில் ஒழுக்கமான மனிதராகவும், விருந்தோம்பல் செய்யக்கூடிய மனிதராகவும், அனுதாபம் காட்டக்கூடிய மனிதராகவும் திகழ்ந்தார்கள்.

உறவினர்களோடும் பகுதிவாசிகளோடும், ஏழைகளோடும் தொடர்புடையவர்களாக இருந்தார்கள். மௌனமாக ஏழைகளைக் கருத்தில் கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய நெருங்கிய உறவுகளில் அவர்களுடைய துணைவியார் மதிப்பிற்குரிய சித்தீக்கா பேகம் சாஹிபா அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான கதிர் பக்ஷ் சாஹிப் (ரலி) அவர்களின் மகள்வழிப் பேத்தியாவார்கள். அல்லாஹ்வின் அருளால் மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். இதைத்தவிர அவர்களுடைய நெருங்கிய உறவுகளில் அவர்கள் பின்விட்டுச் சென்றவர்களில் அவர்களின் பிள்ளைகள் உள்ளனர். துணைவியார் தவிர மூன்று மகள்களும் இரண்டு மகன்களும் உள்ளனர். நான் கூறியதுபோன்று, மகன் வாழ்வை அர்ப்பணித்தவர். இங்கு நமது முரப்பியாவார்கள். அரபி துறையில் தொண்டாற்றுகிறார்கள். அல்லாஹ் தஆலா மர்ஹூம் அவர்களோடு பாவ மன்னிப்புடனும், கருணையோடும் நடந்து கொள்வானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக. (முற்றும்)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சங்கங்களை நிறுவுவதும், பள்ளிக்கூடங்களைத் திறப்பதும் மார்க்கத்திற்கு உதவ போதுமானவை என்று சிலர் கூறுகின்றார்கள். ஆனால், மார்க்கம் என்னவென்றும், நாம் படைக்கப்பட்டதன் இறுதி நோக்கம் என்னவென்றும், இவ்வுலகில் அந்த நோக்கத்தை எந்த வழிவகைகளைக் கொண்டு எவ்வாறு அடைவது என்றும் அவர்களுக்குப் புரியாது. இவ்வுலகில் நமது வாழ்வின் உறுதியான இறுதி நோக்கம் இறைவனோடு ஓர் உண்மையான உறுதியான உறவை உருவாக்குவதுதான் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அதுவே நம்மை எல்லா தன்னல உறவுகளை விட்டும் விடுவித்து இரட்சிப்பு என்னும் ஊற்றுக்கு இட்டுச் செல்லும். மனிதன் உண்டாக்கிய அமைப்புகளாலோ, திட்டங்களாலோ இந்த முழுமையான நிச்சய உறுதியின் வழிகள் ஒருபோதும் திறக்காது. மனிதனால் புனையப்பட்ட தத்துவங்கள் இங்கு பயன்படாது.
(ரூஹானி கஸாயின் தொகுதி 3, ஃபதஹ் இஸ்லாம் பக்கம் 41–44)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad